[21st March 1959

such as hostels, associations and other institutions get their requirements from the merchants at controlled rates. If it is brought to notice that any merchant is unwilling to sell his stocks at controlled rates, the stocks will be requisitioned without hesitation.

**Sri A. VEDARATHNAM** : தேவஸ்தான நெல்லிலிருந்து கண்டிரோல் ரேட்டுக்கு இந்த ஹாஸ்டல்களுக்கு கிடைக்கும்படி செய்ய வகை செய்ய முடியுமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : தேவஸ்தானத்திலிருக்கிற நெல் என்பது மட்டுமல்ல. எங்கு இருந்தாலும், விற்கக்கூடிய தானியங்கள், அரிசியாக இருந்தாலும் சரி, நெல்லாக இருந்தாலும் சரி, சம்பந்தப்பட்டஸ்தாபனங்கள் கலெக்டர்களை அணுகினால், அவர்கள் வேண்டிய ஏற்பாடுகள் செய்துதருவார்கள். இப்பொழுது வியாபாரிகள் சில பேர்களுக்கு இந்த கண்டிரோல் பிடிக்காமல், அவர்கள் ஏதோ இல்லாத கஷ்டங்களையெல்லாம் எடுத்துச் சொல்லுகிறார்கள். மற்ற ஸ்தாபனங்கள் அதைப் பார்த்து மிரளக்கூடாது என்று இந்த சமயத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**Sri K. PERIANNAN** : ஹரிஜன ஹாஸ்டல்களுக்கு வெளியில் சென்று உணவு தானியங்கள் வாங்குவதென்றால் அதிக சிரமம் ஏற்படுகிறது. அதனால் அவர்கள் உள்ளூரிலேயே வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய அரசாங்கம் யோசிக்குமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : ஹரிஜன ஹாஸ்டல்களை நடத்துகிறவர்கள் அந்தந்த மாவட்ட கலெக்டர்களை அணுகி வேண்டிய ஏற்பாடுகள் செய்துகொள்ளலாம்.

**Sri P. G. MANICKAM** : ஹரிஜன ஹாஸ்டலில் படிக்கும் ஒரு மாணவருக்கு மாதாந்திர உபகாரச் சம்பளமாக 15 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதைப் பிரித்துப் பார்த்தால் ஒரு நாளைக்கு 8 அணாவாகிறது. அந்த எட்டணாவை வைத்துக்கொண்டு சாமான்களையும் வாங்கிக்கொண்டு, மற்ற காய்கறிகளையும் வாங்கிக்கொண்டு, மூன்று வேளை சாப்பிடுவது என்பது முடியாத காரியம். ஆகவே, மற்ற ராஜ்யங்களிலிருந்து நமக்கு மான்யமாக கிடைக்கக்கூடிய தானியங்களில் ஒரு பகுதியை இலவசமாக கொடுப்பதுபற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : நான் பொதுவாக குறை கூறவில்லை ஹரிஜன ஹாஸ்டல்கள் நடத்துபவர்களைப்பற்றி. அவர்கள் தங்களுக்கு கிடைக்கக் கூடியவருவாயை வைத்துக்கொண்டு சீராகநடத்தினால், இன்னும் செவ்வையாக நடத்தலாம் என்பது என்னுடைய சொந்த அபிப்பிராயம். இப்பொழுது விலைக் கட்டுப்பாடு செய்யப்பட்டிருப்பதால், மார்கட்டில் இதுவரை விற்றதைவிட குறைவான விலைக்கு இப்பொழுது கிடைக்கிறது. அதற்கு மேலே சலுகைகள் கொடுப்பதற்கு அவசியமில்லை.

**Mr. SPEAKER** : ஹரிஜன மான்யக் கோரிக்கை வரப்போகிறது. அதில் அங்கத்தினர்கள் ஏராளமாகப் பேசலாம்.

*Import of rice from the Andhra State*

* 921 *Q*.—**Sri N. K. PALANISAMI** : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any arrangements have been made through the Centre for the import of rice from the Andhra State to this State; and

(*b*) if so, the details thereof?

21st March 1959]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) The Government of India have been addressed to allot rice which is being procured by them in Nellore district in Andhra Pradesh to this State for distribution in the City of Madras in exchange for an equal quantity of the rice procured by this Government in this State. Their decision is awaited.

SRI N. K. PALANISAMI : மத்திய சர்க்கார் நேரடியாக ஆந்திராவில் இருக்கக்கூடிய வியாபாரிகளிடமிருந்து வாங்கித்தான் கொடுப்பதாகத் தெரிகிறது. அப்படியிருக்கும்பொழுது நேரடியாக நம் சர்க்காரே வாங்குவதற்கு என்ன தடை இருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மத்திய சர்க்கார் அதிகாரிகள் அங்கே போய் "ப்ரொக்யூர்" செய்கிறார்கள். நமக்கு அங்கே போய் "ப்ரொக்யூர்" செய்வதற்கு அதிகாரம் இல்லை. அங்கிருந்து வாங்கிக் கொண்டுதான் வரவேண்டும். ஆந்திராவில் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அவர்கள் கொடுப்பதற்கு தயாராக இல்லை. அதுபற்றி அங்கு ஒன்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

SRI S. LAZAR : எவ்வளவு அரிசி அதுபோல வாங்கிக் கொடுக்குமாறு நம் அரசாங்கம் கேட்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தற்காலிகமாக 10,000 டன் அரிசி வாங்கிக் கொடுக்குமாறு மத்திய அரசாங்கத்தை நாம் கேட்டிருக்கிறோம்.

SRI A. GOVINDASAMY : ஆந்திராவிலிருந்து மத்திய அரசாங்கம் அரிசியை வாங்கி எடுத்துச் சென்று, பிறகு அங்கிருந்து இங்கு வருவதானால், அதற்கு ரயில் சார்ஜ் ஆகுமே ? ஆகவே, நேரடியாக ஆந்திராவிலிருந்து இங்கே கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆந்திராவிலிருந்து வாங்கி உடனே ரயில் மூலம் டெல்லிக்குக் கொண்டு போவதில்லை. வாங்கின இடத்திலேதான் வைத்துக்கொண்டிருப்பார்கள். அதிலே ஒன்றும் சிரமமில்லை.

*Chinese method of paddy cultivation*

*922. *Q.*—SRI K. R. NALLASIVAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

இந்த ராஜ்யத்தில் உள்ள அரசாங்கப் பண்ணைகளில் சீனமுறை நெல் சாகுபடி பரீட்சார்த்தமாக நடத்தப்படுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI K. R. NALLASIVAM : சீனசாகுபடி முறையில் ஏகராவுக்கு 360 டன் நெல் விளைகிறது என்று மத்திய விவசாய மந்திரி சொல்லி அதை சோதித்துப் பார்க்கவேண்டுமென்பதற்காக 30 மாதிரிப் பண்ணைகளில் சோதனை செய்யப்போவதாக தகவல் வந்திருக்கிறதே ? அதுபற்றி சர்க்காருக்கு ஏதாவது தகவல் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது பற்றி சர்க்காருக்கு ஒன்றும் தகவல் இல்லை. பாராளுமன்றத்தில் நடைபெற்ற நடவடிக்கைகளைப் பற்றி கனம் அங்கத்தினர்கள் படித்திருப்பார்கள், அதில் ஒன்றுமில்லை என்று அம்பலப்படுத்தப்பட்டுவிட்டது. சீன முறை என்ன என்பது பற்றியே பலவித அபிப்பிராயங்கள் சொல்லப்படுகிறது. நாத்து நடும் விஷயத்திலே அகலமாக நடுவதா, சேர்த்து நடுவதா என்பதிலேகூட பலவிதமாகச் சொல்லப்படுகிறது. இப்பொழுது சில நிபுணர்கள் மத்திய அரசாங்கத்தின்